சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஐ,ஏ,3/2019 இன் அசல் வழக்கு எண். 154 /2019

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சனிக்கிழமை 04 ம் நாள் எ.ம .சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.இந்துலதா, பி.ஏ,பி.எல்., சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | வயது | |
| த/பெ. | நஞ்சைய்ய கவுடர் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை-

அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர். பிரமாணம் செய்விக்கப்பட்டு அவர் . எ ம சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். நான் சுண்டக்கரைபுதூரில் குடியிருக்கிறேன். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு சம்மன் வந்தது. அதன்பேரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு வெள்ளியங்காடு கிராமத்தில் க.ச. 486/1, மற்றும் 498 ஆகிய காலைகளில் பூமிகள் இருந்தது. மொத்தம் 5.46 ஏக்கரா இருந்தது. இந்த பூமிகள் எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் பாகப் பிரிவினை பங்காக வந்தது . இந்த இரண்டு காலைகளில் உள்ள தடங்களை எவ்வாறு உபயோகப்படுத்தி வந்தோம் என்றால் பூமிகளுக்கு கிழக்கே போகும் தடம் கால் தடம்ஆகும். மேற்கே போகும் தடம் வண்டி லாரி போகும் தடம் ஆகும் . இந்த தடத்தை தான் பூமிகளுக்கு போக வர ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக உபயோகப்படுத்தி வருகிறோம் . நான் பூமிகளை விற்கும்போது மேற்கே போகும் வண்டி தடத்தை தான் மாமூல் வண்டி தடம் என குறிப்பிட்டு விற்பனை செய்திருக்கிறேன். 5 ஏக்கரா 46 செண்ட்டில் வள்ளியம்மாளுக்கு 80 செண்ட்டும் , ரத்தினம்மாளுக்கு 1.70 ம் விற்றிருக்கிறேன். அவ்வாறு வள்ளியம்மாளுக்கு 80 செண்ட் விற்றதாக சொல்லும் பத்திரத்தில் 80 செண்ட் தான் விற்றிருக்கிறேன் . அதிக பூமியை விற்பனை செய்யவில்லை . அதே போல் அந்த பூமியை விற்ற கால கட்டத்தில் தென்புரம் வண்டி தடம் எதாவது இருந்ததா என்றால் வண்டித்தடம் எதுவும் இல்லை . கால் தடம் தான் இருந்தது . அந்த கால் தடம் வழியாக தான் எங்கள் ஊருக்கு போய்க்கொண்டிருந்தோம். அது பள்ளவாரி வழியாக போகிறது . நான் அந்த பூமிகளை விற்ற காலத்தில் இருந்து இன்றைக்கு வரை அந்த பூமியில் கால் தடம் மட்டும் தான் இருந்து வருகிறது என்றால், சரிதான். அதேபோல் வள்ளியம்மாளுக்கு நான் விற்ற ம சா ஆ 2 ஆவணத்தில் 94 செண்ட் விற்கப்பட்டதாக உள்ளது என்றால் 80 செண்ட் தான் விற்றேன் . தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ம சா ஆ 2 ல் வண்டித்தடம் பற்றி குறிப்பிட்டுள்ள பகுதியை நான் எழுதி தரவில்லை. நான் படிக்கவே இல்லை. அண்ணன் தம்பி போல் பழகி விட்டு என்னை ஏமாற்றி

விட்டார்கள் . முதல் ஒரு தடவை பத்திரம் செய்தோம் , ரத்தினம்மாள் பத்திரத்தில் நெம்பர் தப்பாக போய் விட்டது என்று சொல்லி இரண்டாவது முறை ஒரு பத்திரம் செய்தோம் . அப்பொழுதும் பத்திரத்தை நான் படிக்கவில்லை. நான் எழுதி கொடுத்த காலத்தில் 498 2 ஏ காலையின் தென்புரத்தில் தடம் ஏதும் இல்லை . அது கால் தடம் தான் . இவர்களுக்கு விற்ற பிறகு ஊட்டிக்காரர் சுப்ரமணியனுக்கு 3.46 ஏக்கரா கிரைய ம் செய்து கொடுத்தேன் . எவ்வளவு காலத்திற்கு பிறகு ஊட்டிக்காரருக்கு கிரைய ம் செய்தேன் என்றால் , ஒரு 7, 8 வருடம் கழித்து செய்தேன். ரத்தினத்திற்கு 1.20 ஏக்கரா பூமி கொடுத்தேன். ரத்தினத்திற்கு ஒரு முறை 1.20 ம் மற்றொரு முறை 0.20 செண்ட்ம் கொடுத்ததாக பத்திரத்தில் இருக்கிறது என்றால், ஒரு முறை 1.20 தான் கொடுத்தேன். அந்த பத்திரம் எழுதும் போதும் 498/2 ஏ வின் தென்புறத்தில் தடம் இருப்பதாக கூறப்பட்டதா என்றால் அவ்வாறு கூறப்படவில்லை. நான் ஊட்டிக்காரர் சுப்ரமணியத்துக்கு 3.46 ஏககரா கொடுத்தேன். சுப்ரமணிய த்திற்கு விற்பதற்கு முன்பு ஒரு விற்பனை ஒப்பந்தம் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான் . என்னிடம் காண்பிக்கப்படும் அந்த சான்றிட்ட ஒப்பந்தத்தில் விற்பனை செய்தது போக இரண்டு காலைகளிலும 3.46 ஏக்கரா இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் . அந்த விற்கிரைய ஒப்பந்தம் எ ம சா ஆ 1 ஆகும். வள்ளியம்மாளுக்கும் ரத்தினத்திற்கும் கிரையம் செய்து கொடுப்பதற்கு பின்னிட்டு தான் சுப்ரமணிய த்திடம் விற்கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்டேன். என்னிடம்விற்றது போக மீதி இருந்த விஸ்தீரணத்திற்கு தான் விற்கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் சரிதான் . அதேபோல் அந்த விற்கிரைய ஒப்பந்தத்திலும் 498/2 ஏவில் தென்பு றத்தில் தடம் இருப்பதாக கூறவில்லை என்றால், அங்கே தடம் இல்லை . அதைப்பற்றி கூறவில்லை . சுப்ரமணியத்திற்கு நான் எழுதி கொடுத்ததற்கு பின்னிட்டு ஒரு தண்டபாணி என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான் . தண்டபாணி சுப்ரமணியத்திற்கு கிரையம் செய்து கொடுத்தார் . நான் பொது அதிகாரம் கொடுப்பதற்கு முன்பு சுப்ரமணியத்திற்கு விற்கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்திருக்கிறேன். அந்த பொது அதிகார பத்திரம் எ ம சா ஆ 2 சான்றிட்ட நகல் ஆகும். இந்த பொது அதிகார பத்திரத்திலும் இரண்டு காலைகளை பொறுத்து என்னிடம் எந்த விஸ்தீரணம் இருந்ததோ அதை பொறுத்து தான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . அந்த இரண்டு காலைகளையும் சேர்த்து 3.46 ஏக்கரா கொடுத்தேன். இந்த பத்திரத்திலும் தென்புறம் தடம் இருப்பதாக சொல்லவில்லை. எனக்கு தெரிந்த வரையில் சுப்ரமணியத்திற்கு தண்டபாணி, விற்கிரைய ஒப்பந்தத்திலும் பொது அதிகார பத்திரத்திலும் என்ன சொத்தை பொறுத்து எழுதப்பட்டுள்ளதோ அந்த சொத்தை தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான் . சுப்ரமணியத்திற்கு என்னுடைய பொது அதிகார முகவர் என்ற முறையி ல் தண்டபாணி கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் எ ம சா ஆ 3 ஆகும். அதில் 498/2 ஏ காலைக்கு செக்குபந்திகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்றால், ஆமாம். அது 498/2 ஏ கிழபுறம் உள்ள 1.20 போக மீதி 1.31 பொறுத்து கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது . அதில் செக்குபந்தியில் கிழமேல் பள்ள த்துக்கும் வடக்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் சொத்து விபரத்தில் இரண்டாவது

**அயிட்டத்தில் க.ச. 486/1 ல் விற்பனை செய்த 80 செண்ட் போக மீதமுள்ள 2.15 பூமிக்கு செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கு தெரிந்த வகையில் சுப்ரமணியத்திடம் இருந்து ஒரு வரதராஜன் என்பவர் கிரையம் செய்து கொண்டார் . நான் என்ன விஸ்தீரணம் சுவாதீனத்தில் இருந்தேனோ அதே விஸ்தீரணத்தில் தான் சுப்ரமணி அதற்கு பின்னிட்டு வரதராஜனும் இருக்கிறார்கள் . அதே போல் பூமிக்கு மேற்கே போகும் வண்டிதடத்தை நான் எப்படி அனுபவித்து வந்தேனோ அதேபோல் தான் சுப்ரமணிய னும் அவருக்கு பின்னிட்டு வரதராஜனும் அனுபவித்து வருகிறார்கள். குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.)**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- S.Indulatha,**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**SUB COURT, METTUPALAYAM**